ஆகவே, சில பல ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தால் பலன் பெறுமா என்பதை யோசித்து, தக்க முடிவு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Government Mental Hospital at Kilpauk

* 124 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. Minister for Public Health be pleased to state—

(a) Whether there is any proposal to celebrate the Centenary of the Kilpauk Government Mental Hospital; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) சென்னையிலுள்ள அரசு மனநல மருத்துவமனையின் நூற்றாண்டு விழா 12—9—1971-லிருந்து 23—9—1971 வரை கொண்டாடப்பட்டது. அவ்விழாவையொட்டி அரசு மனநல மருத்துவமனையில் 18—9—1971-லிருந்து 23—9—1971 வரை ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டது.

* 125 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the total number of in-patients now being treated at the Kilpauk Government Mental Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சென்னை அரசு மனநல மருத்துவமனையில் 19—10—1971-ம் நாள் நிலைப்படி உள்ளிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 1,725.

X-ray films for Government Hospitals in Madras

* 126 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether X-Ray films are being purchased from Messrs Hindustan Photo Films, a Union Government undertaking, by the Madras City Government Hospitals.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம். சில அளவுள்ளவை அவர்களின் முக்கிய வினியோகஸ்தர்களாகிய எக்ஸ்ரே அண்டு அலைடு பிராடெக்ஸ் இடமிருந்து வாங்கப்படுகின்றன.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையிலே இருக்கக்கூடிய ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் எக்ஸ்ரே பிலிம்ஸ் தரம் உள்ளவைதானா? வெளிநாடுகளிலிருந்து வருகின்றவை போன்று அவை தரமுள்ளவையாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அவை பயன்படுத்தப்பட்டு தரமுள்ளவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அவை எந்த எந்த அளவு உள்ளவையாக தயாரிக்கப்

1972 சனவரி 29]

படுகின்றனவோ அப்படிப்பட்டவைகளை டெண்டர்கள்கூடக் கேட்காமல்—அது மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் என்று நிலையில் வாங்கப்படுகின்றன. இது பொதுத் துறைத் தொழிலை ஊக்குவிக்கின்ற ஒன்றாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் மருத்துவ இலாகாவுக்கு முழு அளவுக்குப் போதுமான அளவுப் பொருட்களைத் தருவதாக இருக்கிறதா ? இல்லையென்றால் வேறு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இவர்களால் செய்யப்படுகிற பிலிம்கள் முழு அளவுக்கு வாங்கப்படமுடியும். ஆனால் அவர்கள் தயாரிக்காத வேறு சில குறிப்பிட்ட பிலிம்கள் வேறு இடங்களிலிருந்து டெண்டர்கள் மூலமாக வாங்கப்படுகின்றன.

New Medical Colleges

* 127 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) Whether it is a fact that the Government have given up the proposal to open more Medical Colleges in this State ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) ஏற்கனவே தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி களில் முழுமையாக பணியாளர்களும் தகுதி பெற்ற ஆசிரியப் பெருமக்களும், அதற்குத் தேவையான பல்வேறு கருவிகளும் அமைத்து, மருத்துவக் கழகத்தின் ஏற்புதலைப் பெறவேண்டி யுள்ளதாகையால் தற்போது புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கான பெருநிதி வசதி இல்லை எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே புதியதாக ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்கத் திட்டம் இருந்ததே அது நடைமுறையில் இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்வேறு ஆலோசனைகள் இருக்கின்ற நிலையில் எதுவும் அரசாங்கம் நடைமுறைப் படுத்துகின்ற திட்டம் ஆக உருவாகவில்லை. எனவே, கைவிடப்படுகின்ற பிரச்னை எழவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மாநிலத்தில் உள்ள மருத்துவ கல்லூரிகள் குறைவாக இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளினால் உருவாக்கப்படுகின்ற டாக்டர்களால் மாநிலத்தில்